**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 193/2023**
**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. அமீர் பாட்ஷா** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சம்சுதீன்** | **Calling** | : | |
| **Village** | : | **குடைப்பாறைப்பட்டி** | **Religion** | : | **முஸ்லீம்** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **44** |
| | | | **Dated** | : | **22.04.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**A1 and A2 present. Both side counsels present.**

அ.சா. 5 (பட்டியல் சாட்சி 5), திரு. **அமீர் பாட்ஷா** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து இரண்டு சக்கர வாகனங்கள் பழுது நீக்கும் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை ஒரு 10.00 மணி இருக்கும், வத்தலக்குண்டு பைபாஸ் செல்லும் சாலையில் உள்ள பள்ளிவாசலுக்கு எதிரே போலீசார் விசாரித்துக் கொண்டு இருந்தார்கள். அந்த வழியாக நான் வந்து கொண்டு இருந்தேன். என்னுடன் தயாநிதி என்பவரும் வந்தார். ஏதோ அடிதடி வழக்கு என்று விசாரணை செய்து கொண்டு, அதை எழுதிக் கொண்டு இருந்தார்கள். அதற்காக என்னிடமும், தயாநிதி என்பவரிடம் சாட்சியாக இருக்க சொல்லி

கையெழுத்து வாங்கினார்கள். அந்த பார்வை மகஜர் Ex. P2. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

எந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. அவர்கள் என்ன எழுதினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னிடம் எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், போலீசார் சொல்லிக் கொடுத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.04.22 16:00:55 +0530